**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 217/2021**
**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 13th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கை 05.08.2017 ம் தேதியில் அச்சன்புதூர் காவல்நிலையத்தில் நான் ஆய்வாளர் பொறுப்பு பணியில் இருந்தபோது, காவல் நிலைய குற்ற எண்.234/2017 வழக்கினை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வழக்கு சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி கனம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகன் என்பவர் மூலமாக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர், வழக்கின் சாட்சிகள் வேலய்யா, சக்திவேல், சோகன், திருமலைக்குமாரசாமி, இசக்கி, இராதாகிருஷ்ணன், மாடசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து 22.10.2017 ம் தேதி வழக்கு கோப்பினை அச்சன்புதூர் காவல்ஆய்வாளரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கின் சான்று பொருட்களில் நீதிமன்ற முத்திரை வைத்து அனுப்பப்பட்டதா? என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன நாள், நேரத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>6 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் விசாரித்த வேலய்யா, சக்திவேல், திருமலைக்குமாரசாமி, இசக்கி, இராதாகிருஷ்ணன், மாடசாமி ஆகியோர்கள் அனைவரும் கேள்விபட்ட சாட்சிகள் என்றால் சரிதான். அவர்கள் யாரும் சம்பவத்தின் போது யார் முன்னிலையில் கையெழுத்து போட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். கேள்விபட்டதாக என்னுடைய விசாரணையில் சொன்ன சாட்சிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1 ற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக ஆவணங்களை தயார் செய்து, வழக்குபதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.13 17:44:34 +0530